MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி
SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

22-09-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் புரட்டாசி 5 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56 | இதழ் 36 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருட்திரு C. அந்தோனி ரோச்

## திருத்தந்தையோடு 54 இந்திய ஆயர்கள் சந்திப்பு



தமிழகம், ஆந்திரா, கர்நாடகம், கேரளா, தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்கள் மற்றும், புதுச்சேரி யூனியன் பகுதியில் இறையாட்சிப் பணியாற்றும், இலத்தீன் வழிபாட்டு முறையின் 54 ஆயர்கள், திருத்தந்தை யைத் திருப்பீடத்தில் சந்தித்தனர். ஆயர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தந்தையை சந்தித்து, தங்கள் மறைமாவட்டங்களின் நிலவரம் பற்றி அறிவிக்கும் *அத் லிமினா* (Ad limina) நிகழ்வையொட்டி, செப்டம்பர் 17, இச்செவ்வாய் காலை 10.30 மணியளவில், இந்தியாவின் 54 ஆயர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

தமிழகம், ஆந்திரா, கர்நாடகம், கேரளா, தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்கள் மற்றும், புதுச்சேரி யூனியன் பகுதியில், இறையாட்சிப் பணியாற்றுகின்ற, இலத்தீன் வழிபாட்டு முறையின் 54 ஆயர்கள், இச்செவ்வாயன்று திருத்தந்தையைத் திருப்பீடத்தில் சந்தித்தனர்.

அருட்பணி பற்றிய திருத்தந்தையுடனான இச்சந்திப்பு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தலத் திருஅவையில் தங்களுடைய மேய்ப்புப் பணிகளைப் பற்றி திருஅவையின் தலைவரான திருத்தந்தையிடம் பகிர்ந்து கொள்வதும் அவர் வழியாக இறைவனின் ஆசீரை, தங்கள் தலத் திருஅவைக்கு பெற்று வருவதும் இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.

## கடவுளின் மொழி பரிவன்பு - திருத்தந்தை பிரான்சிஸ்

பரிவன்பு, இதயத்தின் கண்ணாடிவில்லை (lens) போன்றது. இது எதார்த்தங்களைப் புரிந்துகொள்ளச் செய்கின்றது மற்றும், இது கடவுளின் மொழி போன்றதும் ஆகும்.

நயீன் என்னும் ஊரில், இறந்த தனது ஒரே மகனைத் தூக்கிச் செல்கையில், அழுதுகொண்டே சென்ற கைம்பெண் மீது பரிவுகொண்டு (லூக்.7:11-17), இயேசு அம்மகனை உயிர்பெற்றெழச் செய்த நிகழ்வு, பல நேரங்களில் மனிதரின் மொழி புறக்கணிப்பாக இருக்கின்ற வேளை, பரிவன்பு என்பது, கடவுளின் மொழியாகவும் உள்ளது என்பதை தெளிவாக விளக்குகின்றது.

உங்கள் இதயங்களை பரிவன்புக்குத் திறந்து வையுங்கள். மற்றும் அவற்றைப் புறக்கணிப்பால் மூடிவிடாதீர்கள். உண்மையில், பரிவன்பு நம்மை உண்மையான நீதியின் பாதையில் வழிநடத்துகின்றது. அதன் வழியாக, நாம் நமக்குள்ளே முடங்கிவிடாமல் இருப்பதிலிருந்து காப்பாற்றுகின்றது.

இயேசுவிடம் பரிவு இருந்தது என்று சொல்லாமல், ஆண்டவர் அந்த கைம்பெண் தாய் மீது பரிவு கொண்டார் என்று, நற்செய்தியாளர் கூறுகிறார். இயேசு பரிவு என்ற கண்ணாடிவில்லை வழியாகப் பார்த்ததால், அந்தப் பெண்ணின் எதார்த்த நிலையைப் பார்த்தார் மற்றும் புரிந்துகொண்டார். எனவே பரிவு, எதார்த்தத்தைப் பார்க்கச் செய்கின்றது. இது இதயத்தின் கண்ணாடிவில்லை போன்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே, கடவுள் பரிவுள்ளவராய் இருந்தார் என்பதை விவிலியத்தில் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் அப்பம் பலுகிய புதுமையிலும், இயேசு பசியாய்க் களைத்திருந்த மக்கள் மீது பரிவு கொண்டார்.

பரிவு, நீதியின் பாதையில் நம்மை நடத்திச் செல்கிறது, பிறருக்குச் சரியானதை எப்போதும் ஆற்ற வேண்டும். அதுவே தன்னலம், புறக்கணிப்பு, தனக்குள்ளே முடங்கிவிடுதல் போன்றவற்றிலினின்று நம்மை எப்போதும் காப்பாற்றும்.

“ஆண்டவர் பரிவு கொண்டார்” (லூக்.7:13). நம கடவுள்பரிவன்பின் கடவுள்.பரிவன்பு என்பது, கடவுளின் பலவீனம், அதே நேரம் அதுவே அவரின் பலம்.

## புதுவை மிஷன் அச்சகம்

### தோள் கொடுப்பீர்! தாங்கிடுவீர்!!

**மிஷன் அச்சக புனரமைப்புக்காக நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| சென்ற வார மொத்த வரவு | ரூபாய் 59,400 |
| 1) திரு.தாசு எழெ்ன்-புதுவை | 6000.00 |
| 2) திரு.A.ராஜு, முத்தியால்பேட் | 1000.00 |
| 3) Dr. பால் வளன் அரசு - பாளையங்கோட்டை | 1000.00 |
| 4) திரு. பிலிப் பீட்டர் ஜான் மலையப்பா-கடலூர் | 2000 |
| 5) திருமதி. பொலின் மரியூஸ் - புதுவை | 1000 |
| 6) திரு.D.பெலிக்ஸ் அகஸ்டஸ்-கோயம்புத்தூர் | 1000 |

தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவிய நல்லவர்களுக்கு நன்றி. மற்றவர்களும் உதவிட அன்பு கலந்த இறையாசீரோடு கேட்டுக் கொள்கிறோம்.

- மேலாளர்.

ஆசிரியர் பேனா...

# ஔவையின் பொருளாதாரத் தத்துவமும் திருவள்ளுவரின் வழிகாட்டலும்

மன்னர்களின் காலத்தில் நீதி வழுவா செங்கோல் ஆட்சி நடந்ததாகப் படித்திருக்கின்றோம்; அதுபற்றி ஆச்சரியமும் பெருமையும் அடைகின்றோம். யாருக்காகிலும் அநீதி இழைக்கப்பட்டால், அவர்கள் அரசரிடம் நேரடியாக முறையிடலாம். மனிதர் மட்டும் அல்ல மிருகம் கூட அப்படிச் செய்யலாம். மன்னனே நீதி வழுவினாலும் மக்கள் அதனைச் சுட்டிக்காட்டலாம். அதனால்தான் கண்ணகி பாண்டிய பேரரசனை 'தேரா மன்னா' என்று விளிக்கின்றாள். ஆய்ந்தறிந்து நீதி வழங்க முடியாதவனே என்று இதற்கு பொருள் கொள்ளலாம். மக்கள் நலம் காப்பவராக மன்னரும், மன்னர் நீடிய ஆயுள் உள்ளவராக இருக்க வேண்டும் என்று மக்களும் விரும்பினர். மன்னருக்கு நீடிய ஆயுளை மக்கள் விரும்பியது, அவர் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத்தான். இப்படி மன்னனும், மக்களும் ஒருவர் மற்றவரில் அக்கறைக் கொண்டு வாழ்ந்த காலத்தை பொற்காலம் என்று வரலாறு குறிப்பிடுகின்றது. மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாமல் சுகபோகத்திலும், களியாட்டங்களிலும் மன்னன் ஈடுபட்டால் நாடு சீரழிந்து சிதறிவிடும். நாட்டில் நீதியும் தர்மமும் செத்துவிடும். மக்கள் சொல்லொண்ணா அவதியுறுவர். இதனைக் கொடுங்கோல் ஆட்சி என்று வரலாறு குறிப்பிடுகின்றது. நாட்டில் நீதியை நிலைநாட்டும், வளமை செழிக்கும், செங்கோல் ஆட்சிக்கு வழி காண்போம்.

**பொருளாதாரத் தத்துவம்:**

“வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயிரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்”

- ஔவையின் இப்பாடல் தமிழகத்தின் பொருளாதாரத் தத்துவத்தை வகுத்துக் கொடுக்கின்றது.

**நீர்மேலாண்மை:** மாதம் மும்மாரி பெய்த காலத்திலும் வான் ஈந்த நீரை குளம், குட்டை, ஏரி, கண்மாய், ஊரணி, தாங்கல் என்று நீர் தேக்கங்களை அமைத்து, தேவையான காலங்களில், தேவையான அளவு பயன்படுத்தி பயன் அடைந்த பரம்பரைத் தமிழரினம் நம் இனம். நீர் ஆதாரங்கள் ஆக்கரிமிப்பு செய்யப்படாமல், ஊர் மக்களைக் கொண்டே அவற்றைப் பராமரிப்பு செய்ததும் தமிழரின் பெருமையாகும். வளமைக்கும், வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் நீர் மேலாண்மை செய்வது அரசின், தலையாயக் கடமை என்று ஔவையின் பாடல் அறிவுறுத்துகின்றது. வளமான பொருளாதாரத்தின் முக்கியக் கூறு நீர் மேலாண்மை.

ஆண்டுக்கு மூன்று மழைகூட பெய்யாத இக்காலத்தில் கிடைக்கின்ற நீரைத் தேக்கி வைத்து பயன்படுத்த வக்கில்லாத நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஔவையின் தத்துவப்படி ஆங்காங்கே தடுப்பணைகளைக் கட்டி, நீர் நிலைகளைப் பாதுகாக்க அரசு முன்னுரிமை கொடுத்துச் செயல்பட வேண்டும்.

“இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு” - (குறள் 549)

முறையாகச் செங்கோல் செலுத்தும் மன்னனுடைய நாட்டில் பருவ மழை தவறாமல் பெய்யும்; குன்றா விளைச்சலும் இருக்கும்.

**விவசாயம்:** வளமான பொருளாதாரத்தின் இரண்டாவது முக்கியக் கூறு விவசாயம். 'உழவன் சேற்றில் இரங்கினால் தான் உண்பவன் சோற்றில் கைவைக்க முடியும்.' சோறு என்பது உணவு மட்டும் அல்ல; உடல் நலம், உடை, வியாபாரம், கால்நடை பராமரிப்பு, பொருளாதார வளர்ச்சிக்கான அனைத்து அம்சங்களையும் அது குறிக்கும். விவசாயத்தின் பெருமையை

‘சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' - (குறள் 1031).

உலகம் ஏர்த் தொழிலின் பின்னாலேயே நிற்கிறது; ஆனால் எவ்வளவு துன்பமடைந்தாலும் உழவே தலையானது என வள்ளுவர் போற்றுகிறார். தொழில் வளர்ச்சி என்ற போர்வையில் விவசாய நிலங்களை பொட்டல் காடாக மாற்றியது யாருக்கு சாதகம், யாருக்கு பாதகம் என கணிப்பு செய்வது அவசியம். விவசாயத்தையும், அது சார்ந்த தொழில்களையும், ஆட்சியாளர்கள் ஊக்குவிக்க வேண்டும். இன்று நீர், நிலம் இல்லை, விவசாயம் இல்லை உணவு, இல்லை, உறவு இல்லை, என்ன சாபக்கேடு இது!

**தொழில்:** பசுமைப் புரட்சி (விவசாயம்) வெண்மை புரட்சி (பால் வளம்) தொடர்ந்து தொழில் புரட்சியும் தேவை. இந்த தொழில் புரட்சி விவசாயத்தையும் சார்ந்ததாக அதனை ஊக்குவிப்பதாக அமைந்துவிட்டால் நாடு செல்வச் சிறப்பு மிக்கதாக மாறிவிடும். 10.9.2019 அன்று 'சன் நியூஸ்' ஒளிபரப்பில் 'காவிரியின் கடைமடைக்கு இன்னும் தண்ணீர் வந்து சேரவில்லை. கால்வாய்கள் தூர்வாரப் படாமையால் பல கன அடி நீர் கடலில் கலக்க விடப்படுகிறது என்று விவசாயி புலம்புகிறான். 11-9-2019 'சன் நியூஸ்' செய்தியிலே வினாடிக்கு 12,400 கனஅடி நீர் கடலுக்கு செல்வதாகத் தகவல்.

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது எனக் கருதி ஆனை கட்டிப் போரடித்த தஞ்சை மண்ணிலே விவசாயம் செழிக்கக்கூடாது என்பதற்காகவே காவிரி கடை மடைக்கு நீர் சேரவில்லையோ? நெல் உயர்ந்தால்தான் குடி உயரும், குடி உயர்த்தால்தான் கோல் (அரசர், அரசு) உயரும்) என்ற ஔவையின் தத்துவத்தை ஆட்சியர் மறத்தலாகாது.

விவசாயம் இல்லாத பிற தொழில் வளர்ச்சி நுரையீரல் இல்லாத உடலுக்குச் சமமாகும். அது வறுமை நோயுடைய சமுதாயத்தை உருவாக்கும்.

**வல்லரசு:** நம் நாடு வல்லரசாக வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், வறுமையில்லா, பொருளாதார வலிமையான நாட்டை உருவாக்க அரசு முயற்சிக்க வேண்டும். திருவள்ளுவர் அரசுக்கு கொடுக்கும் அறிவுறுத்தலை நினைவில் கொள்வோம்.

“அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்
செல்வத்தைத் தேய்க்கும் படை” - (குறள் 555).

குடிமக்கள் கண்ணீர் அரசனின் செல்வத்தை தேய்த்து அழிக்கும் படையாகும். எனவே குடிமக்கள் கண்ணீர் விடாமல் இருக்க அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஔவையின் பொருளாதாரத் தத்துவத்தையும், திருவள்ளுவரின் அறிவுரையையும் ஏற்று ஆட்சியாளர்கள் செயல்பட்டால் நாடு வளமையடையும், வல்லரசாகும். மக்களாட்சித் தத்துவத்தின் விழுமியங்களைக் கைவிடாமல் வறுமையை ஒழிக்கும், இயற்கை வளம் காக்கும் பொருளாதாரக் கொள்கையை வகுத்து வலிமை பெருவோம். இத்தகையப் பொருளாதார கொள்கைகளைக் கடை பிடிக்கத் தடைகள் வரலாம். “தடைகள் இல்லாதப் பாதைகள் இல்லை; அதற்காக நாம் நடக்காமல் இருப்பதில்லை.” நம்பிக்கை, முயற்சி, உழைப்பு போன்றவற்றால் அமையும் வாழ்க்கை ருசிக்கும்; பிறரது வாழ்க்கைக்கு துன்பம் தரா செயல்கள் மேலும் சிறக்கும்”. (தினமணி, 20.8.2019, ம.ஜெயமேரி 'தன்னம்பிக்கை வாழ்க்கையின் மூலதனம்') விழிப்போடும், நம்பிக்கையோடும் அரசும், மக்களும் செயல்பட்டால் குடிகளின் வாழ்வு வளமைபெறும், நாடு வல்லரசாகும். விழிப்போடு செயல்படுவோம்.

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு (29-09-2019)

# "கண்டு கொள்வோம்"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி, புதுவை.



நாம் ஒருவரிடம் முழுமையான அன்பைச் செலுத்துகிறோம். அந்த அன்பு நம் செயல்களில் வெளிப்படுகிறது. நாம் அன்பு செய்பவருக்கு நினைவுப் பரிசை அன்பளிப்பாகத் தருகிறோம். நேரத்தை ஒதுக்கி நமது உடனிருப்பை வெளிப்படுத்துகிறோம். அலைபேசி / தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு அன்பை பரிமாறிக் கொள்கிறோம், இது ஒருவகை. நம்மிடம் மனத்தாங்கல்கள் உள்ளவரோடு சண்டையிட்டு பிரிவை ஏற்படுத்திக் கொள்கிறோம். பகைமையை வளர்க்கிறோம். எப்பொழுதும் அவர்களை தரக்குறைவாகப் பேசிக்கொண்டே இருக்கிறோம். அவர்கள் நமக்கு எதிரிகளாகவே இருக்கிறார்கள், இது இரண்டாவது வகை. இந்த இரண்டு வகைக் குழுவினரில் நாம் எதாவது ஒருவகைக் குழுவில் இருப்போம். இவற்றையெல்லாம்விட மூன்றாவது ஒரு வகைக் குழு இருக்கிறது. அதுதான் கண்டு கொள்ளாமை. கண்டு கொள்ளாமை என்பது நாம் ஒரு பொருள் அல்லது நபரை கவனிக்காமல், நமது கவனம் முழுவதையும் வேறு பொருள்கள் மீது அல்லது வேறு நபர்கள் மீது செலுத்துவது. இது பொருள்கள் மீது இருந்தால் பரவாயில்லை. ஆனால் ஒரு நபரை அல்லது ஒரு மனிதரை நாம் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் நாம் மற்றவருக்கு செய்கின்ற உச்சக்கட்ட துரோகம்.

**செல்வம் - அழிவுறுவது:** லூக்கா நற்செய்தியில் மட்டுமே உரிய அருமையான ஓர் உவமை "செல்வந்தர்-ஏழை லாசர்" உவமை. இதைத்தான் இன்றைய நற்செய்தியில் வாசிக்கக் கேட்டோம். கடந்த இரண்டு வாரங்களாக ஞாயிறு நற்செய்தி வாசகங்களில் செல்வத்தை எப்படி சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்று லூக்கா நற்செய்தியாளர் அழகாகப் படம்பிடித்துக் காட்டினார். இன்றைய நற்செய்தியில் செல்வத்தை சரியான முறையில் பயன்படுத்தாத செல்வந்தர்களின் பின் நிலையை இயேசு கூறிய "செல்வரும், லாசரும்" உவமை வாயிலாக விவரிக்கிறார். செல்வந்தன் நரகம் செல்கின்றான். ஏழை இலாசர் வாழ்வு பெறுகின்றார். இவர்களுக்குள் எதாவது நிலத்தகறாரா? சொத்துப் பிரச்சனையா? வேறு எதாவது சண்டை சச்சரவா? செல்வந்தன் இலாசரை தன்னுடைய வீட்டு வாயிலிருந்து விரட்டவில்லை. தன் மேசையிலிருந்து கீழே விழும் துண்டுகளை இலாசர் எடுப்பதைத் தடை செய்யவும் இல்லை. இப்படியிருக்க, செல்வந்தன் செய்த தவறு என்ன? செல்வந்தன் செய்த தவறு, தேவையிலிருந்த லாசரை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. தன் கண்முன்னே உதவி வேண்டி ஒருவன் காத்திருக்கும் அவனை கண்டுகொள்ளவே இல்லை. அதற்காக செல்வந்தன் தன் முடிவில்லா வாழ்வையே காவு கொடுக்க வேண்டியிருந்தது. சென்ற வார நற்செய்தியில் இயேசு, "நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு உங்களுக்கு நண்பர்களை (மனிதர்களை) தேடிக் கொள்ளுங்கள்" (லூக்.16:9) என்றார். எனவே செல்வமானது அழிவுறுவது, இந்த உலகில் மண்ணோடு மண்ணாக மக்கக்கூடியது. அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அருகிலிருப்பவருக்கு, பிறருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை நன்றாக நம் இதயத்தில் பதிய வைக்கவேண்டும்.

**செல்வந்தன்:** விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை என்பது அரண்மனையில் ஏரோது அரசன் அணிகின்ற ஆடை. அத்தகைய விலையுயர்ந்த ஆடையை செல்வந்தன் அணிந்து மிகவும் வசதிபடைத்தவனாக இருந்தான். விருந்து என்பது ஏதோ முக்கியமான விழாக்களில், சுப நிகழ்வுகளில் நாம் எப்பொழுதாவது பரிமாறுவது. ஆனால் இந்த செல்வந்தன் எல்லா நாட்களிலும் விருந்துண்டு வாழ்கின்றான். தமிழ் வார்த்தைகள் "இன்பம்" மற்றும் "மகிழ்ச்சி" இவை இரண்டிற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. இன்பம் நிலையற்றது, மகிழ்ச்சி நிலையானது. இன்பம் சிறிது காலத்தில் துன்பத்தைக் கொடுக்கும். ஆனால் மகிழ்ச்சி எப்பொழுதுமே மன அமைதியைத் தரும். இந்த செல்வந்தன் நிலையற்ற செல்வத்தைக் கொண்டு நிரந்தரமற்ற இன்பத்தைக் கொண்டு வாழ்ந்தான். அதனால்தான் இன்றைய நற்செய்தியில் அந்த பணக்காரனுக்குப் பெயர் தரப்படவில்லை. ஏனென்றால் செல்வந்தர்கள் நிரந்தரமான முகவரி அற்றவர்கள் என்பதே இயேசுவின் செய்தி.

**ஏழை இலாசர்:** "இலாசர்" என்றால் 'கடவுள் உதவுகிறார்' என்று பொருள். இந்த இலாசர் தன் வாழ்நாள் முழுவதும் கடவுள் மட்டுமே தனக்கு பெரும் உதவி என்று அவர் மீது ஆழ்ந்த இறைநம்பிக்கை கொண்டிருந்திருக்க வேண்டும். எனவேதான் இவன் ஏழையாய், உடல் எல்லாம் புண்ணாகி, நாயால் நக்கப்பட்டு, பிச்சை கிடைக்காமல் தவித்தாலும், இறுதியில் இறந்து, வானதூதர்களால் செல்லமாகத் தூக்கிச் செல்லப்பட்டு, ஆபிரகாம் மடியில் மோட்சத்தில் அமர்த்தப்படுகிறான், கடவுளால் உதவப்படுகிறான்.

**கண்கெட்ட பிறகு...:** இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் திமோத்தேயுவைக் குறிப்பிடுபோது "கடவுளின் மனிதனாகிய நீ" என்று குறிப்பிடுகிறார். இலசார் ஒரு ஜடம் அல்ல, மாறாகக் கடவுளின் பிள்ளை, ஒரு மனிதர் என்ற உண்மையை ஆபிரகாம் மடியில் இலாசர் இருந்தபோதுதான் செல்வந்தன் புரிந்துகொண்டான். வாய்ப்புகள் வரும்போது அதை வகைப்படுத்தாதவன் இன்னொரு வாய்ப்பு நமக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பது அறிவீனம். கிடைத்த வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்துவது மிகப்பெரிய தவறு. இலாசருக்கு உதவும் வாய்ப்பு இருந்தும், போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும், ஏழைகளுக்கு உதவுங்கள் என்ற பல போதனைகள் பல விதங்களில் போதிக்கப்பட்டும் செல்வந்தன் கண்டுகொள்ளாமல் இருந்தான். அவன் செய்யாமல் விட்ட நல்ல செயலுக்காக அவனுக்கு நரக தண்டனை கொடுக்கப்பட்டது. கண்கெட்ட பிறகுசூரிய நமஸ்காரம் எதற்கு? அனைத்தும் வீண் தானே?

**கண்டு கொள்வோம்:** பிறர்க்கு பணத்தை, பொருட்களை, செல்வத்தை கொடுப்பதற்கு முன், முதலில் பரிவான பாசமான, இதமான, இனிமையான, அன்பான ஆதரவான நம் வார்த்தைகளைக் கொடுப்போம். பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் கொடுக்கும் பெருந்தொகையைவிட அன்பால் அவர்களோடு சில வார்த்தைகள் பேசுவது மேலானது. உயிரோடு இருக்கும்போது பிறரைக் கண்டுகொள்ளாமல் எரியும் சுடரை அணைத்துவிட்டு அல்லது வஞ்சனை வார்த்தைகளால் புதைத்துவிட்டு இறந்த பிறகு அவர்களுக்கு எண்ணற்ற தீபங்கள் ஏற்றுவது என்ன பயன்? உயிரோடு இருக்கும்போது முகத்தைப் பார்த்து கூட பேசாமல் இறந்த பிறகு சவப்பெட்டிக்கு அருகில் சென்று கடைசியாக ஒருமுறை முகத்தைப் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம்? மேலும் செல்வம் என்பது இறைவனை அடைய ஏணியாகப் பயன்பட வேண்டுமேயொழிய, அந்த ஏணியிலேயே நாம் நின்றுவிடக்கூடாது. தொடக்க கலா முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை அவரவர் தேவைக்கு ஏற்ப தங்களிடம் இருந்ததை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ்ந்தார்கள் (திப.2:42-46). ஆகவே இம்மண்ணுலகில் பிறரைக் கண்டுகொள்வோம், விண்ணுலகில் இறைவன் நம்மைக் கண்டுகொள்வார். ஏழை - பணக்காரர் இடையே உருவாக்கப்பட்டுள்ள பிளவை இணைப்போம். உதவி என்று நாடி, தேடி நம் அருகில் வருகின்ற எண்ணற்ற இலாசர்களை ஏறெடுத்துப் பார்ப்போம், கண்டுகொள்வோம். அப்போதுதான் இறைவனும், ஆபிரகாமும் நம்மை தங்கள் மடியில் ஏற்றுக்கொள்வார்கள்.



# வரங்களின் வாய்க்கால்கள்...12

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

ஒரு மனிதரை அறிந்துகொள்ளலாம். ஆனால் புனித பவுல் சிலுவையை அறிந்துகொள்ள விரும்புகிறேன் என்கிறார். சிலுவை மீது பக்தி ஒன்று, அது பற்றிய அறிவு வேறு ஒன்று. அதைப் பல நாட்கள் ஆழ்ந்து தியானித்தவர்களுக்குத்தான் அது புரியும். புனித சிலுவை அருளப்பர் போன்ற பல புனிதர்கள் தங்கள் பெயருடன் 'சிலுவை' என்பதையும் சேர்த்துக் கொண்டனர் (சிலுவை அருளப்பர்).

19. "இவ்வுலகத் தலைவர்கள் எவரும் அதை அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால், அவர்கள் மாட்சிக்குரிய ஆண்டவரைச் **சிலுவையில்** அறைந்திருக்க மாட்டார்கள்" (1கொரி 2:8).

அறியாமை என்பது சிறிய ஒரு குறை அல்ல. அறியாமை நம்மைப் பெரும்பாதகங்களுக்குக் கூட அழைத்துச் செல்லும். அதனால்தானோ என்னவோ இயேசு "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்றார். ஒருவர் அறியாமையால் ஏதாவது ஒரு சட்டத்தை மீறி தவறு செய்துவிட்டால், அறியாமை என்பதற்காக அது குற்றமில்லை என்று ஏற்கப்படுமா? இது சிலுவை நமக்குப் புகட்டும் பாடம்.

20. "அறிவிலிகளான கலாத்தியரே, உங்களை மயக்கியோர் யார்? இயேசு கிறிஸ்து **சிலுவையில்** அறையப்பட்டவராய் உங்கள் கண் முன் படம் பிடித்துக் காட்டப்படவில்லையா? (கலாத் 3:1).

சிலுவையைப் பற்றி நாங்கள் போதிக்கவில்லையா என்று புனித பவுல் கூறவில்லை படம் பிடித்துக் காட்டப்படவில்லையா? என்கிறார் கல்வாரிச் சிலுவையின் காட்சி நம் மனதில் அழியாத ஓவியமாக, எண்ண அலைகளில் அடிக்கடி ஓடும் திரைப்படமாக இருக்க வேண்டும்.

21. "கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் **சிலுவையில்** அறைந்துவிட்டார்கள்" (கலாத் 5:24).

புனித பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு **சிலுவையில்** அறையப்பட்டிருக்கிறது, என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இங்கு 'ஊனியல்பை.... சேர்த்து அறைந்துவிட்டீர்கள்' என்கிறார். இயல்பைவிட இச்சைக்குத் தீமை மீது அதிக வலிமை உண்டு. அது மிருக இயல்போடு கூடியது.

22. "உலகின் முன் நல்லவர்களாய் நடிக்க விரும்புகிறவர்களே விருத்த சேதனம் செய்து கொள்ளும்படி உங்களைக் கட்டாயப் படுத்துகிறார்கள் கிறிஸ்துவின் **சிலுவையை** முன்னிட்டுத் தாங்கள் துன்புறுத்தப்படாமல் இருக்கவே அவர்கள் இப்படிச் செய்கிறார்கள் (கலாத் 6:12).

இயேசு அதிகம் போராடியது வெளிவேடக்காரர்களோடுதான், அதாவது நடிப்பவர்களை. பலவீனத்தால் பாவம் செய்தவர்களை எளிதாக மன்னித்தார். அவர்களைப் பரிவோடு நடத்தினார். துன்புறாமல் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புபவர்களும் ஒரு விதத்தில் நடிப்பவர்களே! ஏனெனில் அநீதியைத் தட்டிக் கேட்டல், ஏழைகளுக்கு உதவல், தனக்குத் தீங்கிழைத்தவரை மன்னித்தல் போன்றவற்றைச் செய்ய துன்புற வேண்டும். ஒரு சிலருடைய ஆன்மீகம் மலிவுச் சீடர்களின் ஆன்மீகம். அதாவது, துன்புறாமல் அவரைப் பின்தொடர்வது.

23. "நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் **சிலுவையை** அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்த வரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக் கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்" (கலாத் 6:14).

உலகம், சாத்தான், உடல் ஆகிய மூன்றையும் நமது எதிரிகள் என்கிறோம். இயேசுவோ தான் கூறிய ஓர் உவமையில் "முதலில் வலியவரைக் கட்டினாலன்றி எப்படி அவ்வலிய வருடைய வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களைக் கொள்ளையிட முடியும்? அவரைக் கட்டிவைத்த பிறகுதான் அவருடைய வீட்டைக் கொள்ளையிட முடியும்." (மத் 12.29) சாத்தான் என்னும் வலியவனை இயேசு சிலுவையில் அறைந்துவிட்டார்.

24. "தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். **சிலுவையின்** வழியாக இரு இனத்தாரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்" (எபே 2:16).

சிலுவை பகைமையை அழிக்கிறது. சிலுவையின் வழியாக பகைமை அழிவது மட்டுமல்ல இரு இனத்தார் ஒருடலாகும் அளவு ஒப்புரவும் ஏற்படுகிறது.

25. "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் **சிலுவைச்** சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்" (பிலிப் 2:7-8).

முதல் பெற்றோரின் கீழ்ப்படியாமையால் சாவு உலகில் நுழைந்தது. இயசுவின் கீழ்ப்படிதலால் சிலுவை மூலம் வாழ்வு உலகில் நுழைந்தது.

26. "கிறிஸ்துவின் **சிலுவைக்குப்** பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர். அவர்களைப் பற்றி மீண்டும் மீண்டும் உங்களிடம் கூறியுள்ளேன். இப்பொழுதும் கண்ணீரோடு சொல்கிறேன்" (பிலிப் 3:18).

சிலுவைக்குப் பகைவர்களாக நாம் நற்செய்தியில் முதலில் காண்பது புனித பேதுரு. இயேசு தான் பாடுபட்டு இறக்க வேண்டும் என்று சொன்னபோது, பேதுரு இயேசுவைக் கடிந்து கொண்டு 'உமக்கு அவ்வாறு நேரக் கூடாது' என்றார். அப்போதே இயேசு அவரைச் சிலுவையின் பகைவராகக் கண்டார். சிலுவையையும் இயேசுவையும் பிரிக்க முடியாது. தங்களுடைய வீடுகளில் சிலுவையை வைப்பது வீட்டிற்கு நல்லதல்ல என்று எண்ணும் கிறிஸ்தவர்களும் சிலுவைக்குப் பகைவர்களே!

27. "**சிலுவையில்** இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள் ளவை அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்" (கொலோ 1:20).

மனித உடலில் உள்ள இரத்தம் முழுவதும் வெளியேற்றப்படும்போது எத்துணை வேதனை இருந்திருக்கும்? நரம்புகள் முறுக்கேறி தசைகள் நீரும் இரத்தமும் இன்றி வறண்ட நிலையில் ஒவ்வொரு இரத்த அணுவும் செத்துக் கொண்டிருக்கும்போது எத்துணை வேதனை!

28. "தம் **சிலுவையினால்** கிடைத்த வெற்றியால் ஆட்சி யாளர், அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களைக் கிறிஸ்து பிடுங்கிக்கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள் ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்" (கொலோ 2:15).

உலகம் நினைப்பதுபோன்ற வெற்றி அல்ல, பகைமை, பொறாமை, கொலை வெறி, காமம், அகந்தை போன்ற கொடிய குணம் படைத்த ஆட்சியாளர்களை, அதிகாரத்தால் மக்களைத் துன்புறுத்தி ஆள்வோரை கிறிஸ்து அவர்கள் நம்பியிருக்கும் பண பலம், ஆள்பலம் போன்ற படைக்கலன்களைப் பிடுங்கிக்கொண்டு இகழ்ச்சிக்குள்ளாக்குவார்.

29. "**சிலுவையின்** மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர் தம் காயங்களால் நீங்கள் குணமடைந்தீர்கள்" (1பேதுரு.2:24). சிலுவையை நோக்கும்போது அங்கு துன்புறும் இயேசுவை மட்டுமல்ல அவர் தோள்களில் இருக்கும் நமது பாவ மூட்டைகளையும் காண்கிறோம்.

30. "நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் **சிலுவையை** ஏற்றுக்கொண்டார். இப்போது கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்"(எபி.12.2).

தொடரும்



# இயற்கை - இயந்திரம் - இறைவன்

– சுவாமி ஆ. லூயிஸ்.

**இ**ன்றைய உலகை எட்டிப் பார்த்தால், இயற்கையையும் இறைவனையும் ஓரங்கட்டிவிட்டு இயந்திரத்தின் இயக்கத்தில் மயங்கிப் போவதை மறக்க முடியாது. கடவுளைத் தவிர மற்ற அனைத்திற்கும் எல்லைகள் உண்டு, வரம்புகள் உண்டு. குறிப்பாக, மனிதர்களாகிய நமக்கு ஒரு கட்டுப்பாடு உண்டு. நம்மை சரியாக அறியாமல், புரியாமல் கடவுளைப்போல செயல்படுவது சுயநலத்தின் சிகரமாகும். தற்பெருமை, தன்ஆட்சி, தன்மதிப்பு அளவுக்குமேல் செல்வது ஆரோக்கியமல்ல. கடந்தகால வரலாற்றில் இருந்தும், நிகழ்கால அனுபவத்தில் இருந்தும் நாம் பாடங்களைக் கற்றுக் கொள்வது நல்லது. மனித வரலாறு மீண்டும் மீண்டும் திரும்ப இடம் பெறுவதைத்தான் அதிகமாகக் காண்கிறோம். மாறாக, நல்லப் பாடங்களைக் கற்றுக் கொண்டு முன்னேற்றப் பாதையில் கடவுள் விரும்புவதுபோல பயணிப்பது எவ்வளவோ மேலானது.

**எழில்மிகு இயற்கை:** படைக்கின்றவர் நல்லவர் என்பதால் படைப்பும் நல்லது என்பது நமக்கு நன்கு புலப்படட்டும். கடவுள் படைப்பை நல்லதெனவே படைத்து, பராமரித்து, பாதுகாத்து வருகிறார். அவருடைய பிள்ளைகளாகிய நாம்தான் படைப்பை மிகவும் பேராசைக் கொண்டு கசக்கிப் பிழிந்து விடுகிறோம். சுற்றுப்புறச் சூழல், இயற்கையின் சூழல் எல்லாம் எவ்வளவுக்குப் பாதிக்கப்பட்டு வருகிறது என்றால் வெப்பம் அதிகமாகிறது, மழை குறைகின்றது. செயற்கை அதிகமாகிறது. இதனால் பல்வேறுவிதமான பாதிப்புகள் அகத்திலும் புறத்திலும் இடம் பெற்று வருகின்றன.

பூமி என்னும் தாயையை மூச்சுவிட இடம் தராது பூமியை நாம் இப்போது கட்டிடங்களாலும், சாலைகளாலும், பாதைக் கற்களாலும் மூடி, வசதி என்று கருதி, வருத்தத்தில் குளிர் பெட்டிகளில், மின் விசிறிகளோடு வாழ முற்படுகின்றோம். மின் சக்தி நம்மை எவ்வளவு பாதிக்கும் என்று கணக்கிடுவதில்லை. பேராசையின் விளைவாக காட்டை அழித்து வருகிறோம். ஒருவர் சுவாசிக்க பதினாறு மரங்கள் அவரைச் சூழ்ந்திருப்பது ஒரு தேவையாகும். ஆனால் நடைமுறையில் நாம் படுவது நமக்கு நன்கு புரியும். அன்று இருந்ததுபோல இன்று உடல் நலம் பெரும்பாலானவர்களுக்கு இல்லை. இன்று எல்லாமே மருத்துவமனையாகி வருகிறது. பிறப்பு, வளர்ப்பு, இறப்பு எல்லாம் மருந்திலும் மருத்துவமனைகளிலும் செலவழிக்கப்படுகிறது. இயற்கையின் பாதுகாப்பை உணர்ந்து திருந்தி வருவோம்.

**பரிவுள்ள பரமன்:** நிபந்தனையின்றி கடவுள் தனது படைப்பையும் மனித குலத்தையும் பராமரித்து வருவது உண்மை. இருப்பினும் இந்த உண்மையை உள்வாங்காது நாம் வாழ்ந்து வருவது நமக்கு நஷ்டமாகிறது. எது எப்படி இருந்தாலும் இறைவன் தனது பிள்ளைகளை வாழ வைக்க வேண்டுமென்றே விரும்புகிறார், அருள்புரிகின்றார். நாம் கடவுளோடு ஒத்துழைப்பது எவ்வளவு மேலானது என்பதை நம்புவது முக்கியம். இறை உணர்விற்கும் அவருடைய பிரசன்னத்தை நாடாமல் இயந்திர வாழ்வில் நமது வாழ்வு இயக்கப்பட்டு வருகிறது. இளையத் தலைமுறை எப்போதும் தொலைக்காட்சிப் பெட்டி முன்பும், கைப்பேசி, அலைப்பேசி வழியாக தொடர்ந்து இருப்பதையும் நாம் எங்கும் எப்போதும் பார்த்து வருகின்றோம். அமைதி இல்லாத உடல், உள்ளம், மனம் என்ன ஆகும் என்பதை நோய்கள் குறிப்பாக மனநோய்கள் நமக்கு எடுத்துரைக்கும். உடலின் ஈர்ப்பு சக்தி நம்மில் இக்காலக் கட்டத்தில் அதிகமாகி வருவது மிகவும் வருத்தத்துக்குரியதாகும். இதனால் சாதிப்பது ஒன்றுமில்லை, மன உளைச்சல்கள்தான் நாளும் நம்மில் பெருகி வரும் வேதனைகளாகும்.

**இயந்திர உலகம்:** அன்று உடற்பயிற்சி முயற்சி முன் நின்றது, இன்று எதற்கெடுத்தாலும் இயந்திரம் முன் வருகின்றது. பாமர மக்கள் கடந்த காலத்தில் இருக்கின்றனர் அவரது பிள்ளைகள் இயந்திர இயக்கத்தோடு இணைந்து விட்டார்கள். இவர்களின் பேரப்பிள்ளைகள் எப்படி இருப்பார்கள் என்று கணக்கிட முடியாது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை உணர்வது எப்போதும் எல்லாருக்கும் நல்லதாகும். ஒரு பொதுவான கணக்கின்படி இயந்திர உலகம் முப்பது விழுக்காடு பயன்மிக்கதாக உள்ளது, மீதி எழுபது விழுக்காடு பாதிப்புகளை நம்மில் ஏற்படுத்துகின்றது.

இன்று எல்லாருடைய வாழ்விலும் கைப்பேசிகள் இருப்பதை நாம் பார்க்கமுடியும். சாதாரண மக்கள் கூட கைப்பேசியைப் பயன்படுத்துகின்றனர். மனித உறவுகள், தொடர்புகள், சந்திப்புகள் மிகவும் குறைந்து அலைப்பேசி வழியாக ஒரே வீட்டில் உள்ளவர்கள் தொடர்பு கொள்வதை எவ்வாறு புரிந்துகொள்வது? ஆளுமை உறவை இயந்திர உறவாக்கி வருகிறோம். இதுவே இப்போது படிப்படியாக ஞான வாழ்விலும் இடம்பெற ஆரம்பித்துவிட்டது. இயேசு ஆள் தன்மையில் நம்மோடு உறவு கொள்வது கலக்கமுற்று கலைவழி, அலைப்பேசி வழி வளர்வதைக் கண்டு வருகின்றோம். இன்று பலர் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழியாக வழிபாடுகளின் தேவையை திருப்திப்படுத்துகின்றனர் என்பதும் ஓர் அனுபவமாகும். வீட்டில் கூட அனைவரும் அமர்ந்து குடும்பமாக செபிப்பது, கலந்துரையாடுவது, குடும்பமாக உண்பது எல்லாம் நடைமுறைக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை. பிளவுகளை நாம் அறியாமலே உள்வாங்குகின்றோம். இதனால் அடிப்படை அணுவான குடும்பமும் பிரிந்துவிடுகிறது. குடும்பம் பிரிந்தால் சமூகமும் பிரிந்துவிடும். கூட்டங்களைத்தான் நாம் காணமுடியும். தான் உண்டு தன்வேலை உண்டு என்று அந்நியப்படுத்தும் நிலைக்கு ஆளாகிவிடுவோம். இதைத்தான் இன்று எல்லாரும் அனுபவித்து வருகிறோம், இதை ஈடுகட்ட ஓரளவு கைப்பேசி உதவுகிறது. ஆனால் முழுமையான திருப்திக்கு இடமில்லை.

**நில்-கவனி-செல்:** இத்தகைய வாழ்க்கை முறையை தனியாக, குழுவாக, நண்பர்களோடு, உறவினரோடு, கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களோடு நாம் கலந்து பேசி, கடவுளிடமும் அமர்ந்து செவிமடுத்து சரியான, பொருத்தமான பதில்களைப் பெற்று நமது வாழ்வை நாம் செம்மையாக்கிக் கொள்வது நல்லது. மேலோட்டமான மனநிலையோடு நமது வாழ்வை நாம் ஒதுக்கினால் ஒதுக்கப்படுவோம். அதனால் பின்விளைவுகள் பரிதாபமாக இருக்கும். உணர்வுகளை மட்டும் நினைக்காமல், சிந்தனையையும் பயன்படுத்தி, கடவுளின் திருவுளம், இயேசுவின் எடுத்துக்காட்டு, தூய ஆவியின் தூண்டுதல், திருச்சபையின் போதனை, பெரியவர்களின் வழிகாட்டுதல் இவைகளை எல்லாம் மதித்து நமது வாழ்வை பொருள்மிக்கதாகவும், பயன்மிக்கதாகவும் அமைத்துக் கொள்வது நல்லது. ஒருமுறைதான் இவ்வுலகில் வாழ கடவுள், நமது பெற்றோர் வழிவகுத்துள்ளனர். இவ்வாழ்வை நிறைவாக வாழ இயேசு வழிகாட்டியாக இருக்கின்றார். அவரின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வு நிறைவாகும் என்பதில் ஐயமில்லை. படைப்போடும் படைக்கின்றவரோடும் இணைந்து வாழ கற்றுக்கொள்வோம், கற்றுக் கொடுப்போம்.

# இறையாட்சிப் பணியில் பெண்கள்

- அருட்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

**கருத்துரை-6**

**நீதித்தலைவி தெபோரா**

**(நீத 4:1-24, 5:1-31)**

**யார் இந்த நீதிபதி?**

தெபோரா இலப்பிதோத்தின் மனைவி. (நீத 4:4)

இவர் இஸ்ரயேலில் ஒரு தாய். (நீத 5:7)

இவர் பெண்களில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர். (நீத 5:24)

இவர் இஸ்ரயேலருக்கு இறைவாக்கினராய் நியமிக்கப் பட்டவர். (நீத 4:4)

இவர் இஸ்ரயேலரை விடுவிக்கத் தேர்ந்துகொள்ளப்பட்ட முதல் பெண் நீதித்தலைவி. (நீத 4:24)

இவர் இஸ்ரயேலரின் ஒரு பெண் தலைவர்.

**தெபோரா என்பதன் பொருள்**

பொதுவாக தெபோரா என்றால் **'தேனீ'** என்று பொருள் கொள்ளப்படுகிறது. எபிரேய மொழியில் தெபோரா என்ற வார்த்தை **'பெண்' மற்றும் 'மனைவி'** என்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

"தேனீ", ஒரு தாழ்ச்சிமிகு பூச்சி ஆகும். பலதரப்பட்ட திறமைகள் இருப்பினும், தெபோராவிடம் **மனத்தாழ்ச்சி இருந்தது.** அதற்கு கடவுள் அவருக்குத் தந்த **வெற்றியே** சாட்சியாகும்.

தங்கள் தலைவர்களைக் **கூட்டாகத் தொடரும் தேனீக்களைப் போல,** யூத மக்கள் தீர்க்கதரிசிகளையும், இறைவாக்கினர்களையும் பின் தொடர்கின்றனர்.

தனக்கு துரோகம் செய்ய விழைவோரை **கொட்டும் தேனீக்களைப்போல,** கடவுளின் வார்த்தை, அவருடைய கட்டளையைப் பின்பற்றாதவரைக் கொட்டுகிறது.

எபிரேய **மக்கள் பலவழிகளில் தேனீக்களைப் போல** இருப்பதை 'தோரா' என்ற தொகுப்பில் காணமுடிகிறது.

**("உன் அகக் கேனியில் உள்ள சுவைமிகு தேனை வெளிக்கொணர்ந்து பார். உன் மேனி மேன்மை அடைவதை நீ உணர்வாய்")**

**இவரது தனித்திறமைகள்**

**"தெபோரா பேரீச்சை"** என்றழைக்கப்படும் மரத்தடியில் இவர் எப்போதும் மக்களுக்காக காத்திருப்பார். ஏனெனில் **தீர்ப்புப் பெறுவதற்காக** இஸ்ரயேலர் இவரிடம் சென்றவண்ணமாய் இருந்தனர்.

விண்ணக இறைவனிடம் **விசுவாசமும்,** தன்னிலே நலிவற்ற **நம்பிக்கையும்,** கடவுளின் கட்டளையை செய்து முடிப்பதில் **வைராக்கியமும்** உள்ள சிறந்த **போர் வீரராய்** திகழ்ந்துள்ளார்கள். ஆகவேதான் ஆண்மகன் பாராக், சீசரா மீது போர்தொடுக்க பயந்தபோதும், "நான் செல்கிறேன் ஆனால் நீர் உடன் வந்தால் மட்டுமே செல்வேன்", என்ற பாராக்கிற்கு, **நான் உடன் வருகிறேன்** என்று **தைரிய** வார்த்தைகளை அளித்து அவரை அழைத்துக்கொண்டு போருக்கு சென்றவர்தான் தெபோரா.

கடவுள் தனக்குத் தரும் செய்தியைத் தயக்கமில்லாது, பாரபட்சமில்லாது, தீர்க்கமாய் சொல்லக்கூடிய **திடமான தீர்க்கதரிசி** தெபோரா.

விண்ணக தேவனின் விழுமியங்களைக் **கவியாக்கி, கவியைப் பண்ணாக்கி, பண்ணைப் பாடலாக்கி,** பாடலைப் பரவசத்துடன் இசைத்து மகிழ்ந்த சிறந்த **பாடலாசிரியர்தான்** தெபோரா.

கடவுள் தரும் பணியை பணிவுடனும், துணிவுடனும், நீதியுடனும் செய்கிறவர்களுக்கு அவர் **ஞானத்தையும், தைரியத்தையும்** தருகிறார் என்பதற்கு இவர் ஒரு சிறந்த உதாரணம். அதனால்தான் **ஞானத்திற்கும், தைரியத்திற்கும்** பெயர் பெற்றவராகத் திகழ்ந்தார் தெபோரா.

கடவுள் தன்னிடம் பணித்த பணி பெரியதுதான் என்றாலும், அதாவது 900 இரும்பு ரதங்களைக் கொண்ட சீசராவைத் தோற்கடிப்பது கடினமான பணிதான் என்றாலும், **தன்மேல் முழு நம்பிக்கையும், தன்னால் முடியும் என்ற செயலூக்கமும்** அவரிடம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

தெபோரா மற்றவர்களைப்போல் பலி செலுத்தி வழிபாடு செய்யவில்லை. ஆனால் வழிபாட்டுச் சேவைகளை வழிநடத்தி **பிரசங்கித்தவர்.** விவிலியத்தில் தீர்க்கதரிசி மற்றும் நீதிபதி என்று கூறப்பட்ட ஒரே நபர் சாமுவேல். அவ்வாறே விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே பெண் **தீர்க்கதரிசி மற்றும் நீதிபதி** தெபோரா மட்டுமே.

**தெபோரா கதைச் சுருக்கம்**

எழில் செழிக்கும் எப்ராயிம் மலைநாடு. அங்கே இராமாவுக்கும், பெத்தேலுக்கும் இடையே சுகமும், சுவையும் தரக்கூடிய ஒரு **"தெபோராப் பேரீச்சை மரம்".** இம்மரத்தடிதான் தெபோராவின் வழக்காடு மன்றமாய் இருந்தது. இஸ்ரயேலின் இதயம் துர்க்குணங்களால் கற்களாகிக் கொண்டிருந்த காரணத்தால் இறைவன் அவர்களை கானானியரிடம் கைவிட்டுவிட்டார். இஸ்ரயேலர் ஒடுக்கப்பட்ட காலம் அது. கொடுமைகளால் நடுங்கிய இஸ்ரயேலர் மீண்டும் இறைவா! காப்பாற்று! காப்பாற்று! என்று தவமிருந்து கண்ணீர் வடித்தனர். துரோகிகளையும், விரோதிகளையும் நேசித்த இறைவனது கருணை இஸ்ரயேல் பக்கம் மீண்டும் திரும்பியது. ஆகவே, ஆண்டவர் மீட்புக்கான முயற்சியை நீதித்தலைவி தெபோராவிடம் அறிவிக்கிறார். தெபோரா ஆண்டவரிடம் இருந்து வந்த ஆணையை அபினோவாமின் மகன் 'பாராக்கை' அழைத்து, அவரிடம், **"இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உமக்குக் கட்டளையிடுகிறார்,** என்று ஒப்படைக்கிறார். ஆனால் பகைவனாகிய கானானிய மன்னன் யாபினின் படைத்தலைவன் சீசரா மற்றும் அவனது படைகளைக் கண்டு சற்றே பீதி கொண்ட பாராக்கு, அவரிடம் **"நீர் என்னுடன் வராவிடில் நான் செல்லமாட்டேன், நீர் என்னுடன் வந்தால் நான் வருகிறேன்",** என்று பிடிவாதம் பிடிக்க **"நானும் வருகிறேன்"** என்று தெபோரா எழுந்து பாராக்குடன் போருக்குப் புறப்பட்டார். போர் பயணத்தின்போது சோர்ந்துவிட்ட பாராக்கிடம் **எழுந்திரும்! ஏன் அவநம்பிக்கை கொள்கிறீர்? ஆண்டவர் உம்முன் செல்லவில்லையா?** என்று சாடுகிறார் இலட்சியத் தலைவி தெபோரா.

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

6-ஆம் பக்கத் தொடர்ச்சி...

**(பூக்கள்கூட பூத்த பின்புதான் புவியில் விழுகிறது! காய்கள்கூட கனிந்த பின்புதான் மடிய ஆரம்பிக்கிறது! மேகம்கூட நீர்த்துளியைத் தந்த பின்புதான் நீங்குகிறது!**

**பூக்கவேண்டும், கனிய வேண்டும், மழைத்துளியாய் பூமியைத் தொடவேண்டும் என்ற இலக்கு இவற்றிற்கே இருக்கின்றபோது நமக்கு மட்டும் வேண்டாமா ஓர் இலக்கு!**

**நமது இலக்கில் நாம் முழுமை அடைய வேண்டாமா? வரலாற்றில் நாமும் வரிகளாக வேண்டாமா? இலக்கில் நாம் பயணிக்கின்றபோது இறைவன் விளக்காய் நம்முன் சுடர் தந்து கொண்டே செல்வார்.)**

தெபோராவின் **எழுச்சிக் குரலால்** பாராக்கு பத்தாயிரம் பேருடன் தாபோர் மலையிலிருந்து இறங்கினார். அப்போது ஆண்டவர் சீசராவையும் மற்றும் அவனுக்குரியவை அனைத்தையும் வாள்முனையில் சிதறடித்தார். சீசராவின் படை முழுவதும் வாள்முனைக்கு இரையாயிற்று. ஒருவர் கூட தப்பவில்லை. சீசரா மட்டும் அருகேயிருந்த எபேரின் மனைவி யாவேலின் கூடாரத்திற்குள் ஒளிந்துகொள்ள ஓடினான். அப்போது...

**தொடர்கிறார் தெபோரா...**

## குழந்தைக்கு பெயர் சூட்ட வேண்டுமா? விவிலியத்தை அணுகுங்கள்!

**அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,**
உதவி பங்குதந்தை, பேராலயம், புதுவை.



சர்வ வியாபியின் சகோதரச் சமூகமே! ஒரு குழந்தைக்கு பெயர் சூட்டுவது என்பது எளிதான காரியம் அல்ல. அதன் பின்னணியில் ஏராளமான நிழ்வுகள் உள்ளன. ஒரு குழந்தை பிறந்தவுடனே, ஏன் பிறப்பதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பிலிருந்தே அக்குழந்தைக்கு என்ன பெயர் சூட்டுவது என்கிற எண்ணம் பலரையும் ஆட்டுவிக்கிறது. நல்ல பெயராக வைக்க வேண்டும் என்று சொல்லி பெற்றோர்களும் உற்றார் உறவினர்களும் பல்வேறு கோணங்களில் பெயர்தேடும் ஆராய்ச்சியை மேற்கொள்வார்கள். சிலர், ஆண் குழந்தையாக இருப்பின் தாத்தாவின் பெயரையும் பெண் குழந்தையாக இருப்பின் பாட்டியின் பெயரையும் சூட்டுவார்கள். ஒருசிலர் குழந்தையின் தாய், தந்தை இருவரின் பெயரையும் இணைத்து வாஸ்கோடகாமா இந்தியாவைக் கண்டுபிடித்ததுபோன்று புதியதொரு பெயரை அவர்களே கண்டுபிடித்து சூட்டுவர். மற்றும் சிலர் அக்கம் பக்கத்தில் யாருக்கும் வைக்கப்படாத அதிநவீன பெயரை தங்கள் குழந்தைக்கு சூட்டவேண்டுமென்று வலைதளங்களில் ஆராய்ந்து, அந்தப் பெயருக்கு அர்த்தமிருக்கிறதோ இல்லையோ, வாயில் நுழைகிறதோ இல்லையோ, ஆனால் நவீன பெயர் என்று சொல்லி ஒன்றைச் சூட்டிவிடுவர். சிலர் அந்தக் குழந்தையின் பிறந்த நாளில் வரும் புனிதருடைய பெயரைச் சூட்டுவார்கள். இன்னும் சிலர், தங்கள் நண்பர்களுக்கு தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு ஆண் குழந்தைக்கான 10 பெயர்களையும், பெண் குழந்தைக்கான 10 பெயர்களையும் தேர்ந்தெடுத்து கொடுக்கச் சொல்லி நச்சரிப்பார்கள். இதெல்லாம் போதாதென்று பங்குத் தந்தையை அணுகி, சாமி! என் குழந்தைக்கு ஒரு நல்ல பேரா சொல்லுங்க! என்பார்கள். அந்த ஒரு குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்குள் வருகிறவர் போகிறவர், தெரிந்தவர் தெரியாதவர் என்று அந்த ஊரையே ஒரே களேபரமாக்கி விடுவார்கள்.

இந்த சிரமங்களுக்கெல்லாம் தீர்வு அளிப்பதற்கு விவிலியம் இருக்கிறது. விவிலியத்தில் ஒன்றல்ல இரண்டல்ல மாறாக ஆயிரக்கணக்கான பெயர்கள் உள்ளன. ஒரு நாள் அமர்ந்து, ஒரு வெள்ளைத் தாளில் ஆதாம்... ஏவாள்... காயின்... ஆபேல்.... என்று எழுதத் தொடங்கினீர்கள் என்றால் நீங்கள் மிகவும் வியந்து போவீர்கள். ஏனென்றால் நம்மால் கணக்கிட முடியாத ஏராளமான பெயர்கள் விவிலியத்தில் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக அந்தப் பெயர்கள் அனைத்தும் மிக மிக அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒரு சில விவிலியப் பெயர்களையும் அவற்றின் பெயர் விளக்கங்களையும் இங்கே காண்போம்.

**1. ஆதாம்** - ஆதாம் எனும் இப்பெயர் 'ஆதாமா' என்னும் எபிரேய மொழியிலிருந்து வருகிறது. ஆதாமா என்றால் 'மண்' என்று அர்த்தமாகும். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் மனிதனுக்கு இப்பெயர் மிக பொருத்தமாக சூட்டப்பட்டது.

**2. ஏவாள்** - என்றால் 'உயிருள்ளோர் எல்லோருக்கும் தாய்' – (தொ.நூ 3:20) என்று அர்த்தமாகும். ஏனெனில் அவர்தான் பூமியின் முதல் பெண், முதல் தாய் ஆவார்.

**3. காயின்** - என்றால் 'ஆண்டவர் அருளால் பெறப்பட்டவன்' என்று பொருளாகும். (தொ.நூ 4:1) ஏனெனில் ஏவாள் காயினை ஆண்டவரின் அருளால் பெற்றுக்கொண்டார்.

**4. ஆபிரகாம் – சாரா:** ஆபிரகாமுக்கும் சாராவுக்கும் இரண்டு பெயர்கள். ஆபிரகாமின் இயற்பெயர் 'ஆபிராம்' அதாவது 'உயர்வுபெற்ற தந்தை' (Exalted Father) என்பதாகும். 'சாராய்' என்றால் 'இளவரசி' (Princess) என்று அர்த்தமாகும். ஆனால் கடவுள் தொ.நூ 17:5 – ல் அவர்கள் இருவரின் பெயர்களையும் மாற்றுகிறார். ஆபிராம் என்பது ஆபிரகாம் 'பல நாடுகளின் தந்தை' என்றும், சாராய் என்பது சாரா 'பல நாடுகளின் தாய்' என்றும் மாற்றப்படுகிறது. கடவுளை நம்பியதால் ஆபிரகாம் எண்ணற்ற நாடுகளுக்குத் தந்தையானார், சாரா எண்ணற்ற நாடுகளுக்குத் தாயானார்.

**5. ஈசாக்கு** – 'tzachaq' -என்ற எபிரேயச் சொல்லுக்கு 'சிரி' என்று அர்த்தமாகும். எனவே 'Yitzachaq' என்றால் 'சிரிப்பவன்' என்று பொருளாகும். ஏனெனில் 'உனக்கு ஒரு மகன் பிறப்பான்' என்று கடவுள் சொன்னதும் ஆபிரகாம் எனக்கு வயதாயிற்றே... என்று சொல்லி சிரித்தார். அதை ஒட்டுக்கேட்ட சாராவும் சரித்தார். எனவே குழந்தை பிறந்தபோது, 'இவன் என்னை சிரிக்க வைத்தான் என்று சொல்லி அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்கள் (தொ.நூ 21:3-6).

இப்படி ஏராளமான பெயர்கள் அதற்குரிய பொருள் விளக்கங்களோடு விவிலியத்தில் இருப்பது நம்மை வியப்புகுள்ளாக்குகிறது. எனவே நமது குழந்தைகளுக்கு ஏதோ ஒரு பெயரை, அர்த்தமற்ற பெயர்களை வைப்பதைவிட, விவிலியத்திலுள்ள பெயர்களைச் சூட்டி அப்பெயருக்கு எற்றாற்போல் அவர்களை வாழ வைப்போமே!!!.

## இரங்கல் செய்தி



திருச்சி சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி **அந்தோணி ஜோசப்,** SDB (55) அவர்கள் செப்டம்பர் மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை காலை 04.15 மணியளவில் திருச்சியில் உள்ள காவேரி மருத்துவமனையில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

12–09–2019 வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் திருச்சியில் உள்ள அம்சம் (Amsam) பங்குத்தளத்தில்ஃ மேதகு ஆயர் ராஜேந்திரன் (Bishop of Thakalai) தலைமையில் கூட்டுத் திருப்பலியும்ஃ இறுதி அடக்கச் சடங்கும் நிறைவேற்றப்பட்டது. ஏறக் குறைய 350 குருக்களும்ஃ 200 மேற்பட்ட அருட்சகோதரிகளும்ஃ ஏராளமான பொதுமக்களும் இத்திருப்பலியில் கலந்துகொண்டு அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர். அவருடைய சபை (SDB) குருக்களுக்கும்ஃ அவருடைய குடும்ப உறவுகளுக்கும் செபம் கலந்த ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இறைவனுக்காய் பணி செய்த கரங்கள் இறைவனின் பாதங்களை அலங்கரிக்கச் சென்றுள்ளது. அருட்தந்தை அந்தோணி ஜோசப், SDB அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற தொடர்ந்து செபிப்போம்.

**- ஆசிரியர், சர்வவியாபி**

## விண்ணக வாழ்வின் 28-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 11.06.1949



மறைவு: 01.10.1991

### அல்போன்சா மரி பரிமளா

**சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்**

அன்னாரது ஆன்ம இளைப் பாற்றிக்காக 1–10–2019 செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு புதுவை, சம்மனசுக்களின் இராக்கினி (பருவாஸ்) தேவாலயத்தில் நிறைவேற்றப்பட இருக்கும் திருப்பலியில் பங்குகொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**
**ராஜீ செல்வநாதன்**
**நவீன், சாந்தினி, ராகினி**

## பிறப்பின் நூற்றாண்டு விழா நினைவு அஞ்சலி

பிறப்பு: 1919



நூற்றாண்டு: 2019

### திருமதி.மரி தெரேசம்மாள் திரு. ஆரோக்கியசாமி (எ) தூசைராஜ்

**"நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே!" (பிலிப் -1:21)**

22-09-2019 ஞாயிறு காலை 6.30 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

நினைவில் வாழும்
**மகன்கள், மகள்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

## விண்ணக வாழ்வின் 8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 14-06-1936



இறப்பு: 21-09-2011

### S. மரிய ஞானம்

**என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே, உங்கள் அனுதின செபத்தில் என்னை நினைத்தருளுங்கள்.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 21-9-2019 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் பங்குகொண்டு செபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**
**மகன்: M. மங்களதாஸ்**
முத்தியால்பேட்டை.

144 இளம் உள்ளங்களுக்கு

## பானையும் பாடமும்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**இரு பானைகள்:** ஆற்றங்கரையில் ஆல மரத்தடியில், அமர்ந்து ஒரு துறவி தன்னை அண்டி வந்த சீடர்களுக்கு பல எடுத்துக்காட்டுகளின் மூலமாகப் போதித்துக் கொண்டிருந்தார். அந்த குருவுக்கு முன்பாக இரண்டு மண் பானைகள் இருந்தன. ஒன்றில் மணல் நிரப்பப்பட்டிருந்தது. மற்றொன்றில் ஒன்றும் இல்லை. அந்த துறவி சீடர்களை நோக்கி, "அந்தப் பானைகளில் நீங்கள் பார்ப்பதென்ன?" என்று கேட்டார். உடனே சீடர்கள் பலரும் ஒரு பானையில் மணல் நிரம்பியுள்ளது என்றும் மற்றதில் எதுவும் இல்லை என்றும் கூறினார்கள். ஆனால் ஒரே ஒரு சீடர் மட்டும் வெற்றுப் பானையாக காட்சியளித்த பானையில் காற்று உள்ளது என்றார். சீடரின் அறிவியல் அறிவை மெச்சிய குரு அவனை நோக்கி, "இந்த பானையில் உள்ள காற்றை உன்னால் வெளியேற்ற முடியுமா?" என்று கேட்டார். "முடியும்" என்று கூறியச் சீடன் அந்தப் பானையை எடுத்துக் கொண்டுபோய் அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் அமிழ்த்தி நீரால் நிரப்பிக் கொண்டு வந்தான். குருவுக்கு மிக்க மகிழ்ச்சி.

**பானை தந்த பாடம்:** இப்போது குரு சீடர்களுக்கு ஒரு முக்கிய பாடத்தை கற்பிக்க ஆரம்பித்தார்: "மணல் நிரம்பிய முதல் பானையைப் போன்றவர்கள் வெளிப்படையானவர்கள். அவர்கள் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார் இல்லை. அவர்களைக் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை. இரண்டாவது பானை வெற்றுப் பானையாகக் காட்சியளித்தாலும் உள்ளே காற்று இருந்தது. அதைபோல வன்மம், வெறுப்பு, பொறாமை போன்ற தீய எண்ணங்கள் நிறைந்த மனதைக் கண்களால் கண்டுவிட முடியாது. பானையை நீரால் நிரப்பியதும் அதிலிருந்த காற்று வெளியேறிவிட்டது. அதுபோல தீய எண்ணங்களுக்கு எதிர்மறையான அன்பு, பிறர் நலம், நட்பு, மன்னிப்பு போன்ற உயரிய பண்புகளை மனதில் செலுத்த, மனம் நீரால் நிரப்பப்பட்ட பானையாகிவிடும். பலருக்கும் பயன் தர முடியும்" என்றார்.

**சிந்திக்க:** நாம் மணல் நிரம்பிய பானையாக இருக்கலாம். நீரால் நிரப்பப்பட்ட பானையாக மாறலாம். ஆனால் வெற்றுப் பானையாக மட்டும் இருக்க வேண்டாமே!

---

**திருத்தம்:**

1) 08-09-2019 இதழில் முதல் பக்கத்தில் நன்கொடை பகுதியில் எண் 6) நாராயணன் தெரேசம்மாள் ஜோசப் நல்லதம்பி என்பதை **நாராயணன் தோமையம்மாள் ஜோசப் நல்லதம்பி** என்று திருத்தி படிக்கவும்.

2) 15-09-2019 இதழில் பக்கம் 5-இல் ஆவியில் ஆமென் என்ற பாராவில் நான்காவது வரியில் ஆவிதான் நமது நிரந்தரமான **பொய்மை,** என்பதை நிரந்தரமான **மெய்மை** என்று திருத்தி படிக்கவும்.

## இளைஞனே விடாதே!

– கடலூர் சுகிர்தராசு

இளைஞனே! விழித்தெழு! மலைத்து விடாதே!
வாழ்வில் சிறக்க தாழிவினை விலக்கு!
தாழிச்சி உள்ளே! அச்சம் நீக்கு
வையகம் வளமே நேயமே நெஞ்சின்
சொல்லும் செயலும் உனது கண்கள்
வெல்லும் அடக்கமே! நிற்க ஏற்க!
உன்னை விழிப்புடன் வைத்து கொள்க!
கொள்ளை கொலைவன் புணர்வும் இழிவு
தலையெடுக்கலாமா! எழுச்சி பெறுக
நல்லவை நிகழ எல்லாம் செய்க!
உன் கண் காதுகண் எண்ணம் ஓங்குக!
நடப்பதைக் கேட்பதை ஆழ்ந்து நோக்கு!
வழியும் தெரியும் ஆற்றலைக் காட்டு!
இளமை வாழ்வின் ஞாயிறு இளைஞனே!
வளமை சேர்க்க வரிந்துக் கட்டு!
சிறப்புற வேண்டின் ஒழுக்கம் ஓம்பு!
ஒழுக்கம் விழுப்பம் தந்திடு மன்றோ!
உலகின் உயர்வும் வளமையும் நீயே!
செல்வம் கல்வி பக்தி அன்பு
நல்ல வண்ணம் ஒளிர செயக
உங்கள் செயல்கள் மனிதரில் ஒளிர்க
கல்வி அறிவை விரிவுசெய் திடும்
பக்தி அன்பு இறைவனின் அருளே!
செல்வம் சிந்தையைச் சிக்க லாக்கும்!
நல்கவே செல்வம்! பரவ லாக்கு!
இளைஞனே! அனத்துடன் பேணுக புறத்தை!
மன்னரா மக்கள்! சொன்வர் எங்கே!
மக்களாட் சியின்தத் துவமே இன்று!
வாக்களித் திட்டோர் மனுவேந் துகிறார்.
மக்களின் தன்மா னங்காக் கவே நீ!
புறப்படும் இளைஞனே! அரசியல் கற்பி!
பொதுநலம் காத்திட புறப்படு உடனே!
விடுதலை தியாகி இழந்தனர் எல்லாம்
நாடு விடுதலை பெறவே வாழ்ந்தனர்
நாட்டை ஆளும் ஆட்சியர் இன்று
ஊதியம் பெறுகிறார் ஆதாயம் தேடியே!
வாழ மக்கள் வழியே; காட்டு
எழுவீர் உழைப்பீர் சிறக்கவே வாழ்வு
போட்டிப் பொறாமை பொய்மை அகந்தை
கோபம் இன்ப ஆசைகள் அறுப்பீர்!
பாவம் இன்றி புனிதம் நோக்கு!
புறப்படு! கடவுள் உம்மோ டிருப்பார்
கிருத்துவம் காட்டும் அன்பை ஏந்து
இயேசுவில் என்றும் நம்பிக்கைக் கொள்
கிருத்துவ வாழ்வை மறந்து விடாதே!
நற்கனி தந்திடு, சமூகம் உயரும்
பொற்புறு பணியால் உலகை நடத்து
வீர இளைஞனே உலகை நடத்து!
தீரும் தீமையே வாழ்க நன்றே!

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 08.07.1940



விண்ணில் : 27.09.2018

**திருமதி. L. ரோஸாலி**

**(W/o. Late S.லூர்துசாமி, விழுப்புரம்)**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - (யோவா.11:25)

இறைவா, இவ்வுலகிலிருந்து அழைக்கப்பட்ட இவரின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும். - ஆமென்.

27-09-2019 காலை 6.00 மணிக்கு விழுப்புரம், திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

நினைவேந்தல்: 29-9-2019 ஞாயிறு காலை 9.30 மணிக்கு விழுப்புரம், திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் திருப்பலி.

**பிரிவால் துயருறும்**

**மகன்கள், மகள்கள், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

---

# விண்ணக வாழ்வின் 3-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**என்றும் எங்களுடன் வாழும்**

**திரு. B. லூயிஸ்**

**தோற்றம்**
**24.10.1943**

**மறைவு**
**27.09.2016**

நித்திய பிதாவே! எங்கள் குடும்பத்தின் சுடர் ஒளியாய் இவ்வுலகில் வாழ்ந்து தன் வாழ்வின் கடமை களை மிகபொறுப்புடன் செய்து முடித்து இப்பூவுலகை விட்டு நித்திய சமாதானத்தில் இளைப்பாறும்படி உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட

**திரு. B. லூயிஸ்**

அவர்களின் ஆத்துமத்திற்கு உம் மீட்பால் வரும் நித்திய வாழ்வை தந்தருளும் ஆண்டவரே. ஆமென்.

ஒரு கர்.மங்.திரி.

திருப்பலி: 27-09-2019 வெள்ளி காலை 6.00 மணி இடம்: புனித அந்திரேயா ஆலயம், ரெட்டியார்பாளையம். காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயம்.

**பிரிவால் துயருறும்**

**மனைவி: B. மரி தெரேஸ்,** ஆசிரியர்

(Rtd.PST, GPS Reddiarpalayam.Puducherry.)

**மகன், மருமகள், மகள், மருமகன்**
**பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.**

**புதுவை.**



# விண்ணக வாழ்வின் 59-ஆம் ஆண்டு நினைவு

*செபம்*

**ஓ இனிய இயேசுவே, நிலையான பேரின்பத்தின் தூய ஒளியே, கருணையின் உருவே, உம்மால் அழைக்கப்பட்டவரும் என்றும் மறக்க முடியாதபடி எங்கள் மனதில் நிலைத்துவிட்டவருமான எங்கள் அன்பு தந்தையின் ஆன்மாவை இரக்கம் புரிந்து இறையாட்சியில் இணைத்திட வேண்டுமென்று இறைஞ்சுகிறோம், ஆமென்.**

*பிரிவால் வாடும்*

**மகன், மகள்கள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**

## திரு. ஜோசப் ஞானராஜா

**தோற்றம் : 29-07-1914**
**மறைவு : 26-09-1960**

திருப்பலி: 26-09-2019 வியாழக்கிழமை காலை 5.15 மணி, 6.15 மணி, புதுவை, ஜென்ம இராக்கினி மாதா பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலிகளில் பங்கேற்று அவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக வேண்டிக் கொள்ளவும்.

---

**28-ம் ஆண்டு நினைவு அஞ்சலி 13-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**





**திரு. சாமு தைரியம்**

**பிறப்பு: 09-07-1905**
**இறப்பு: 01-10-1991**

**திருமதி. லூயிஸ் ஞானம்மாள் தைரியம்**

**பிறப்பு: 03-03-1915**
**இறப்பு: 24-05-2006**

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! ஆத்துமங்களை இரட்சிக்கிறவரே! உமது அன்பில் மூழ்கி இளைப்பாறுவதற்காக இப்பூவுலகினின்று உம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட எங்கள் அன்பு பெற்றோர்

**திரு. சாமு தைரியம்**
**திருமதி. லூயிஸ் ஞானம்மாள் தைரியம்**

ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். முடிவில்லா பிரகாசம் இவர்களுக்கு பிரகாசித்து சமாதானத்தில் இளைப்பாறச் செய்தருளும். – ஆமென்.

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கொள்ளுப்பேத்திகள்.**

---

திருப்பலி: 01–10–2019 செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவர்களது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

புதுவை.

**சீவியத்தில் என்னை நேசித்தவர்களே**
**மரணத்திலும் என்னை மறவாதீர்கள்**



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 24-ஆம் படலம்

கடந்தேகு திருவிழா (பாஸ்கா : கடத்தல்) நாள் வந்தது. நான் இன்றிரவே எகிப்து நாடெங்கும் கடந்து சென்று எகிப்து நாட்டின் மனிதர் தொடங்கி விலங்குவரை அனைத்து ஆண்பால் தலைப்பிறப்பையும் சாகடிப்பேன். எகிப்தின் தெய்வங்கள் அனைத்தின் மேலும் நான் தீர்ப்பிடுவேன். நானே ஆண்டவர்! இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்து செல்வேன்... என்றார் கடவுள். – (விப.12:12–13)

காப்பியப் பாடல் 1252

**23 நள்ளிரவில் அரசனாக இருந்த பார்வோனின் தலைமகன் தொடங்கி சிறையில் கிடந்த கைதியின் தலைமகன்வரை எகிப்து நாட்டின் எல்லா ஆண்பால் தலைப் பிறப்பையும் மற்றும் விலங்குகளின் அனைத்து ஆண்பால் தலை ஈற்றுகளையும் ஆண்டவர் சாகடித்தார். (விப.12:29)**

வந்தது அந்த இரவு நேரமும்
நொந்தழு மாறு சாவைக் கொணர்ந்தது!
முன்னும் இப்படி வந்தது இல்லை,
இன்னும் இப்படி வருமா என்றே
எவரும் அறியார் இறைவனைத் தவிர!
தவறும் மனிதன் தண்டனை பெறுவான்
என்பது மட்டும் உறுதியாய்த் தெரிந்தது!
பன்முறை இறைவன் கட்டளை மறுத்தான்
வன்முறை யாலே எகிப்தை ஆண்ட
மன்னவன் பார்வோன்! அவசன் ஆண்ட
தேயம் எகிப்து, அவன்குடி மக்கள்
மாய மத்திர கடவுள் கொள்கையில்
நெஞ்சை நிமிர்த்தி, இசுரயேல் மக்கள்
கெஞ்சக் கெஞ்ச கொஞ்சமும் கருணை
கொள்ளா மனிதராய் வாழ்ந்த வாழ்க்கையால்
கொள்ளை வாதனை எத்தனை வந்தன!
தவறும் மனிதன் இவற்றை எல்லாம்
அவனே உணர்ந்து திருந்திடத் தானடா!
ஆணவம் ஏனடா? அதட்டலும் ஏனடா?
கோணலாய் வாழவா? குணங்கெட் டழியவா?

காப்பியப் பாடல் 1254

**24 மோசே பின்வருமாறு அறிவித்தார்: ஆண்டவர் கூறுவது இதுவே: நள்ளிரவு வேளையில் நானே எகிப்தின் நடுவே புறப்பட்டுச் செல்வேன். அப்போது எகிப்து நாட்டில், அரியணையில் வீற்றிருக்கும் பர்வோனின் தலைமகன் முதல் மாவரைக்கும் கற்களுக்குப்பின் அமர்ந்திருக்கும் அடிமைப் பெண்ணின் தலைமகன்வரை உள்ள முதற்பேறு அனைத்தும் விலங்குகளின் ஆண்பால் தலையீற்று அனைத்தும் இறந்து விடுவர் (விப.11:4–5)**

கரிய இருள்சூழ் நடுஇரா நேரம்!
பெரிய மலையையும் கண்விரித் தெவருமே
பார்க்கவே முடியா நள்ளிர வதனில்,
ஊர்எலாம் உறங்கையில் ஒருநட மாட்டமும்
இல்லவே இல்லா நள்ளிர வதனில்,
வல்லமை எல்லாம் கொண்ட ஆண்டவர்
திருவுளத் திட்டம் நிறைவேற் றுதற்கே,
ஒருவரும் ஊனக் கண்ணால் பார்க்கவே
முடிந்திடா விண்ணுரு வதனில் வந்தார்!
அடியெடுத் தவரோ பார்வோன் அரண்மனை
உள்ளே நுழைந்தார்! தடுப்பவர் எவருளார்!
கொள்ளை நோயொன்று இறுதியாய் வருமெனும்
கடவுள் கட்டளை நிறைவுறும் நேரம்!
முடம்பட்(டு) எகிப்தே கதறும் காலம்!

காப்பியப் பாடல் 1255

**25 பார்வோனின் தலைமகன், அரச பட்டத்திற்கு உரியவன் படுத்த படுக்கையில் செத்துக் கிடந்தான்!**

ஆண்டவர் தண்டனை, அரண்மனை உள்ளே
தாண்டியே செல்ல முடியாக் காப்புடன்
இருந்த பார்வோன் தலைமகன் தாக்கவே,
கருத்த இரவில் மஞ்சம் துஞ்சிய
பட்டத் தரச உரிமைக் குரியவன்,
கெட்ட தெதுவுமே அணுகவே முடியாப்
பாது காப்பினில் படுத்த படுக்கையில்
யாதும் தெரியாமல் செத்துக் கிடந்தனன்!

**- தொடரும்..**

---

## புதுச்சேரி தட்டாஞ்சாவடி, புனித பாத்திமா அன்னை பங்கு
## மரியன்னை பிறந்த நாள் விழா மற்றும் மறைக்கல்வி ஆசிரியர் விழா

நற்செய்திப் பணியாளர் மற்றும் ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு 08-09-2019 அன்று புதுச்சேரி தட்டாஞ்சாவடி பங்கு புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் ஞாயிறு திருப்பலி முடிந்தவுடன் மறைக்கல்வி ஆசிரியர்களை கௌரவிக்கும் விழா நடைபெற்றது. திரு. அல்போன்ஸ் மோசஸ் அனைவரையும் வரவேற்றார். பங்குத்தந்தை, அருட்பணி பொன். அருள்தாஸ் ஆசிரியர்களைப் பாராட்டி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்தினார். அனைவருக்கும் “இறைநம்பிக்கையில் உருவாக” என்ற புத்தகம் வழங்கப்பட்டது. மறைக்கல்வி, துறவறம் மேற்கொள்ள பாலமாக அமைகின்றது என்றும், இது சிறார்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் தேவைப்படுகின்றது என்றும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தவறாது மறைக்கல்வி வகுப்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். திரு.சகாயராஜ், திரு.சின்னப்பன், சகோதரி லியோ மற்றும் சகோதரி.ஆரோக்கியசெல்வி மற்றும் திருமதி.வெண்ணிலா ஆகிய மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்குபெற்றனர். திரளான மறைக்கல்வி மாணவர்கள் அவர்தம் பெற்றோரோடு நிகழ்ச்சியில் கலந்துகொண்டது பாராட்டுக்குரியது. அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை வேதியர் திரு.தேவராஜ் மற்றும் திரு. சேவியர், திருமதி. தெரேசா ஆகியோர் செய்திருந்தனர்.

---

## பாராட்டுகிறோம்

குஜராத், இயேசு சபை மாநிலத் தலைவராக 17-09-2019 அன்று நியமனம் செய்யப்பட்டிருக்கும் பேரருட்திரு. **துரை பெர்னார்டு** அவர்களைப் பாராட்டுகிறோம். இவர் நம் புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத்தைச் சார்ந்த கணக்கன்குப்பம் பங்கைச் சேர்ந்தவர். இவர் திண்டிவனம், புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர் (1976-78) என்பது மகிழ்ச்சிக்குரியது. இவரின் நியமனம் நமது உயர் மறைமாநிலத்திற்கு பெருமை சேர்க்கிறது என்பதால் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். பேரருட்திரு துரை பெர்னார்டு அவர்களின் பணி சிறக்க புதுவை-கடலூர் உயர் மறைமாநில பேராயர், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் வாழ்த்தி செபிக்கின்றோம்.

**Published and Printed by** Rev.Fr.C.ANTONI ROCHE **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.C.ANTONI ROCHE.
Manager : Very Rev. Msgr. A. Arulanandam.